# ஆதியில் ஆப்பிள்....

காது மடல் நுனி
கழுத்துப்புறம் ஏதோ ஊர...,
கண்ணெதிரில் நட்சத்திரங்கள்...!
கால்கள் பின்னி
ஊர்ந்த கைகளுக்கிடையே
சிக்கித்தவித்தது வெட்கம்...!

படர்கையில் பாதிதேகம்
நிலைக்கண்ணாடியில்...,
தோன்றி விலக,
மறைந்து சிரித்தது வெட்கம்...!

பின்னிரவுப்பறவையொன்று
ஜன்னல் வழிபார்த்து
சீட்டியடித்தது.....!

மயக்கம் பாதி, தயக்கம் மீதி...
முடிவில் முதலாவது ஜெயிக்க,
தயக்கமும், வெட்கமும்...
கட்டில் நுனியில்...!

தேக அணுக்கள்
ஒன்றாகக் குவிந்து, பின்..
ஒவ்வொன்றாய் பிரிய...
வியர்வைத்துளியில்,
கழுவப்பட்டது நாணமும், தயக்கமும்....!

புரியாத புதிராய்
புதிதாய்த் தொடங்கத் தொடங்க,
புரியாதவை புலப்படலாயின...!

இருபது வருடங்களாய் பூட்டிவைத்த
பொக்கிஷங்கள் கொள்ளையிடப்பட்டும்,
வாரி வழங்கிய திருப்தியும்,
மிதமிஞ்சிய உணவுண்ட திருப்தியும்,
உண்டாயின.... !

மூச்சூக்காற்றும் வெப்பமாக,
வியர்வையில் தேகம் தெப்பமாக...!
களைத்து விலகும் போது
காதல் மட்டும் பிரவாகமாய்ப்பொங்கும்..... !
வாழ்க...... !
ஆதியில் ஆப்பிள் கடித்தவன்.... !

--- பிரநேசம்.
pranesam@yahoo.com